

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சேலம் மேற்கு மற்றும் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) தொழிலதிபரும், தமிழ் இசை சங்கத்தின் மதிப்பியல் செயலாளருமான ஏ.சி.முத்தையா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடல் நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மைத்ரேயன், கழக கல்வியாளர் அணியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

# இந்தியாவின் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலம் தமிழ்நாடு!

## 'தி எகனாமிஸ்ட்' ஏடு புகழாரம்!

சென்னை, நவ. 17 -

இந்தியாவின் சூப்பர் ஸ்டார் மாநிலம் எது? எனும் தலைப்பில் நவம்பம் 13 ந் தேதிய 'தி எகனாமிஸ்ட்' ஏடு வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:

இந்தியா எவ்வளவு வேகமாக வளர்ச்சியடைய வேண்டும்? பிரதமர் நரேந்திர மோடி, 2047 ஆம் ஆண்டுக்குள், அதாவது அதன் சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவிலேயே "பணக்கார நாடு" என்ற அந்தஸ்தைப் பெற விரும்புகிறார். கடந்த 25 ஆண்டுகளில் அதன் பொருளாதாரம் ஆண்டுதோறும் சுமார் 8% விரிவடைய வேண்டும் என்று ஒரு பின்னோக்கிய கணக்கீடு தெரிவிக்கிறது, இது கடந்த 25 ஆண்டுகளில் சராசரியாக 6% ஆக இருந்தது. சில பெரிய மாநிலங்கள் மட்டுமே நம் பத்தகுந்த வகையில் இத்தகைய எண்களை வெளியிடுகின்றன.

குறிப்பாக இரண்டு இடங்கள் முன்மாதிரிகளாகக் கருதப்படுகின்றன. ஒன்று குஜராத், 2014 இல் பிரதமராக வருவதற்கு முன்பு மோடி ஒரு தசாப்தத்திற்கும் மேலாகப் போட்டியிட்ட பெரிதும் தொழில்மயமாக்கப்பட்ட மேற்கத்திய மாநிலம். மற்றொன்று தென்கிழக்கில் உள்ள தமிழ்நாடு, இது இரட்டை இலக்கங்களில் வளர்ந்து வருகிறது, கடந்த ஆண்டு புள்ளிவிவரங்களைப் பதிவு செய்த மாநிலங்களில் இந்தியாவின் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக திகழ்கிறது.

இந்தியாவின் மக்கள் தொகையில் சுமார் 5% பேர் குஜராத்தில் வசிக்கின்றனர், ஆனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% க்கும் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள் மற்றும் ஏற்றுமதியில் கால் பங்கிற்கும் அதிகமாக உள்ளனர். குஜராத் தரவுகளை வெளியிட்ட கடைசி நிதியாண்டான 2022-23 வரையிலான தசாப்தத்தில், அதன் பொருளாதாரம் நிலையான விலையில் ஆண்டுக்கு சுமார் 8% விகிதத்தில் விரிவடைந்தது. தனிநபர் வருமானம் தேசிய சராசரியை விட 60% அதிகமாகும்.

### பெரிய எச்சரிக்கை!

பல தலைமுறைகளாக குஜராத் ஜவுளி உற்பத்தியாளராகவும், வைரங்களை மெருகூட்டுபவராகவும், கப்பல் போக்கு வரத்து மையமாகவும் செழித்து வருகிறது. சமீபத்தில் அது மருந்து மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் போன்ற மூலதன தீவிர மெகா திட்டங்களுக்கான ஒரு வீடாக தன்னை கொண்டுள்ளது. இது இப்போது நிதி சேவைகளில் வளரவும், சிப் தயாரிப்பிலும் நுழையவும் முயற்சிக் கிறது.

20 ஆண்டுகளில் குஜராத் அதன் மின் உற்பத்தி திறனை ஐந்து மடங்கு அதிகரித்தது; உயர்தர சாலைகளின் எப்போதும் விரிவடையும் வலையமைப்பிற்கும் நற்பெயரைப் பெற்றது. இருப்பினும் அதன் வெற்றி ஒரு பெரிய எச்சரிக்கையுடன் வருகிறது. பல சாதாரண குஜராத்திகள் கிட்டத்தட்ட 12% பேர் "பல பரிமாண வறுமையில்" வாழ்கின்றனர், இது 12 குறிகாட்டிகளின் கூட்டு அளவீடு ஆகும்.

இது தமிழ்நாட்டை விட ஐந்து மடங்கு அதிகம் மற்றும் மிகவும் ஏழ்மையான மாநிலமான மேற்கு வங்கத்தைப் போலவே உள்ளது.

### குஜராத்தில் மோசமான கல்வி!

குஜராத்தின் மெகா தொழிற்சாலைகள் இவ்வளவு வேலைகளை உருவாக்காமல் பெரிய லாபத்தை ஈட்ட முடியும். ஆனால் மோசமான கல்வி மற்றொரு காரணம். இந்திய ரிசர்வ் வங்கி தொகுத்த தரவுகளின்படி, குஜராத்தின் இளைஞர்களில் பாதிக்கும் குறைவானவர்கள் உயர்நிலைப் பள்ளி வரை படிக்கின்றனர் இது இந்தியாவின் தேசிய சராசரியான 58% ஐ விடக் குறைவு. மாநிலத்தில் "நல்ல சாலைகள் மற்றும் நல்ல உள்கட்டமைப்பு" உள்ளது என்று அகமதாபாத்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் இந்திரா ஹிர்வே கூறுகிறார்.

### தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி!

விமானத்தில் இரண்டு மணி நேரம் தெற்கே பயணித்தால், ஏறக்குறைய அதே அளவு பணக்கார மற்றும் மக்கள் தொகை கொண்ட மற்றொரு கடற்கரை மாநிலமான தமிழ்நாடு. கடந்த ஆண்டு அதன் பொருளாதாரம் 11% விரிவ டைந்தது. இந்த திடீர் வளர்ச்சி மின்னணு உற்பத்தியின் வளர்ச்சியுடன் பெரிதும் தொடர்புடையது. குறிப்பாக, ஆப்பிள் இந்தியாவில் தயாரிக்கும் சாதனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு செய்தது. தமிழ்நாடு கடந்த ஆண்டு சுமார் $15 பில்லியன் மின்னணு சாதனங்களை ஏற்றுமதி செய்தது (இந்தியாவின் மொத்தத்தில் சுமார் 40%), இது 2022-23 உடன் ஒப்பிடும்போது மூன்று மடங்கு அதிகம். ஆனால் மாநிலம் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் லாரிகளின் பெரிய தயாரிப்பாளராகவும் உள்ளது.

### முன்னணியில் தமிழ்நாடு!

ஆரோக்கியமான மற்றும் நன்கு படித்த பணியாளர்களை உருவாக்குவதில், தமிழ்நாடு பெரும்பாலான சகாக்களை விட முன்னணியில் உள்ளது. அதன் ஆரம்பசுகாதாரநிலையங்களில் குஜராத்தை விட சுமார் 60% அதிகமான மருத்துவர்கள் உள்ளனர்; அதன் பொது மருத்துவமனைகளில் இரண்டு மடங்குக்கும் அதிகமான படுக்கைகள் உள்ளன (மேலும், எந்தவொரு மாநிலத்தையும் விட மிக அதிகம்). அதன் இளைஞர்களில் 80% க்கும் அதிகமானோர் அதிகபட்ச காலத்திற்கு பள்ளியில் தங்குகிறார்கள். இளைஞர்களில் பாதி பேர் கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறார்கள் (தேசிய சராசரி 28%).

### சமூக சீர்த்திருத்தங்கள்!

தமிழ்நாட்டில் வளர்ச்சியின் நன்மைகள் பரவலாகப் பரவுவதை உறுதி செய்வதற்கு சுகாதாரம் மற்றும் மூளைத்திறனை மேம்படுத்த உதவியுள்ளது. குஜராத்தை விட மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரே மாதிரியாக இருந்தாலும், குஜராத்தை விட மிகக் குறைவான ஏழை மக்கள் இங்கு உள்ளனர். குஜராத் மற்றும் இந்தியாவின் பெரும்பகுதி கடுமையான உள்கட்டமைப்பில் கவனம் செலுத்தும் அதே வேளையில், பொதுப் பொருட்களை வழங்குவதில் மாநிலம் சிறந்து விளங்குவதற்கான ஒரு காரணம், தமிழ்நாடு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சமூக சீர்திருத்தங்களைத் தொடங்கியது. பல மாநிலங்கள் "நிலப்பிரபுத்துவ கோட்டைகளாக" உள்ளன என்று மாநில திட்டக் குழுவின் ஜே. ஜெயரஞ்சன் கூறுகிறார்.

### பெண் பணியாளர்கள் அதிகம்!

இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் உள்ளூர் கிளையின் தலைவரான ஏ.ஆர். உன்னிகிருஷ்ணன் கூறுகையில், மாநிலத்தின் பல பொறியியல் கல்லூரிகள் குறிப்பிடத்தக்க அளவு திறமைகளை உருவாக்குகின்றன. தமிழ்நாடு இவ்வளவு அதிக மின்னணு உற்பத்தியை வென்றதற்கு மற்றொரு காரணம், அது நன்கு படித்த பெண் பணியாளர்களை வழங்குகிறது. இந்தியாவில் உற்பத்தித் துறையில் பணிபுரியும் அனைத்து பெண்களில் சுமார் 40% பேர் தமிழ்நாட்டில் வேலை செய்கிறார்கள்.

கொள்கை வகுப்பாளர்கள் நம்புவது போல் நாடு வேகமாக வளர வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் தங்கள் சொந்த பலத்திற்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும். குஜராத் மற்றும் தமிழ்நாடு தங்கள் கடலோர இடங்களிலிருந்து பயனடைந்துள்ளன.

### சுகாதாரம் - கல்வியில் முதலீடு!

இருப்பினும், இந்த ஜோடி பாடங்களை வழங்குகிறது. இந்தியா முழுவதும் உள்ள அரசியல்வாதிகள், திறன்களை மேம்படுத்துவதை விட கான்கிரீட் போடுவதன் மூலம் வளர்ச்சியைத் தேடுவது எளிதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் காண்கின்றனர். புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் நல்ல முதல் பக்கங்களை உருவாக்குகின்றன மற்றும் உடனடி நன்மைகளைத் தருகின்றன. இதற்கு மாறாக, பள்ளிப்படிப்பை மேம்படுத்துவதன் பலன்கள் மிகவும் மெதுவாக வருகின்றன.

இருப்பினும், இந்தியாவின் மக்கள் தொகையின் சக்தியை கட்டவிழ்த்துவிடுவதற்கு சுகாதாரம் மற்றும் கல்வியில் முதலீடு தேவைப்படும். இது பாலின வேறுபாடு, சாதி மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு போன்ற தடைகளை எதிர்த்துப் போராடுவதையும் குறிக்கும், அவை மக்கள் தங்கள் திறனை நிறைவேற்றுவதைத் தடுக்கின்றன. இது எளிதான வேலையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. ஆனால், தமிழ்நாடு காட்டுவது போல், இது பெரும் பலனைத் தரும்.

இவ்வாறு 'தி எகனாமிஸ்ட்' ஏட்டில் கட்டுரை வெளியாகி உள்ளது.

### வாக்குத் திருட்டு குற்றத்திற்காக

# தலைமைத் தேர்தல் ஆணையரை கைது செய்வார்களா?

## முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி!



**சென்னை, நவ.17-**

**"வாக்குத் திருட்டுக் குற்றத்திற்காக தலைமைத் தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமாரை கைது செய்வார்களா?" என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.**

சமூக வலைதளங்களில் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் அவர்கள் அளித்த பேட்டி வைரலாகி வருகிறது. அந்த சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் பொன்ராஜ் அவர்களின் பேட்டி வருமாறு:

ஞானேஷ்குமார் என்று ஒருத்தர் இருக்கிறார். எலக்ஷன் கமிஷ்னர். படித்துதானே வந்திருக்கிறார். எலக்ஷன் கமிஷனராக உட்கார்ந்து இருக்கிறார். ஐ.ஏ.எஸ்.படிப்பை கிளியர் செய்து விட்டு தானே வந்திருக்கிறார். அவர் செய்து கொண்டிருக்கின்ற அயோக்கி யத்தனத்தை நீங்கள் பட்டியல் இட முடியுமா?

அந்த அயோக்கியத்தனத்திற்கு யாராவது பதில் சொல்றாங்களா இங்கே? படித்தவர் தானே அவர். டாக்டர் படித்து இருக்கிறார். அவன் குண்டு வெடிக்கிறான், ஓ.கே. தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறான். அவனுக்கு மதம் காரணமாக இருக்கிறது, அவனை அரஸ்ட் செய்துவிடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்,

**ஞானேஷ்குமாரை எப்போது அரஸ்ட் செய்வீங்க.? ஒட்டு மொத்த இந்தியாவின் வாக்கை திருடுகிறார். அவைர எப்படிங்க அரஸ்ட் செய்வீங்க.? 65 இலட்சம் பேர்களுடைய வாக்கை திருடி இருக்கிறார். ஞுஜசு ஐக் கொண்டு, தமிழ்நாட்டில் இப்போது வாக்கை திருடப் போகிறார். எப்படி அரஸ்ட் செய்வீங்க. ஐ.ஏ.எஸ்.ஆக இருக்கிறார். எலக்ஷன் கமிஷனரா இருக்கார். படித்து இருக்கிறார். பி.ஜே.பிக்கு அடிமையா இருகார்? ஒ படித்தவன் எப்படி பி.ஜே.பிக்கு அடிமையாக இருப்பார். இன்டிபெண்டன்ட் எலக்ஷன் கமிஷனில் படித்தவர், ஐ.ஏ.எஸ்.முடித்தவர், இன்றைக்கு ஒரு அடிமை சேவகம் செய்கிறார் என்றால், அவருக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?**

ஈக்குவள் செய்து பார்ப்போமா. இதனை ஈக்குவள் செய்ய தெரிந்த நாராயண திருப்பதிக்கு எலக்ஷன் கமிஷனை ஈக்குவள் செய்ய தெரியாதா?

**நெறியாளர்:** ஓட்டும் தீவிரவாதமும் ஒன்றா என்று கேட்கிறார்களே?

**பொன்ராஜ்:** ஆமாம் ஒன்றுதான். மக்களின் அடிப்படை உரிமையான ஓட்டைத் திருடி நாட்டை கைப்பற்றுவது என்பது என்னது? தீவிரவாதம் தானே! தீவிர வாதத்தைவிட கொடுமையான செயல் அது. இது எலக்ஷன் தீவிரவாதம், அரசியல் தீவிர வாதம். அந்த அரசியல் தீவிர வாதத்திற்கு இன்டிபெண்டன்டா செயல்படக் கூடிய எலக்ஷன் கமிஷனர் ஒரு அடிமையாக செயல்படுகிறார் என்றால் எப்படி அதனை ஏத்துக் கொள்வீர்கள். என்ன பதில் சொல்கிறார். சுப்ரீம் கோர்ட்டிற்கு பதில் சொல்கிறாரா? என்ற கேள்விக்காவது பதில் இருக்கிறதா? ஜனநாயக முறைப்படி எழுப்பக் கூடிய எந்தக் கேள்விக்காவது பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்!

இது தீவிரவாதத்தை விட அதி தீவிரவாதம்.

அவர் படிச்சு இருந்து என்ன பிரயோசனம். படிச்சவருக்கு அறிவு இருக்கனும், காமன்சென்ஸ் இருக்க வேண்டும். பதவிக்கு ஏற்ற வகையில் செயல்படக் கூடிய தைரியம் இருக்க வேண்டும். உனக்கு அரசியல் சாசனம் இன்டிபெண்டட் உரிமை கொடுத்து இருக்கு. அதனையும் மீறி நீங்கள் அடிமையாக இருக்கிறீர்கள் என்றால், நீ என்ன பதவிக்காக அடிமையாக இருக்கிறாயா? உன் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் ஐ.ஏ.எஸ்.ஆபிசர்ஸ். படித்தவர் அடிமையாக இருக்கிறான் என்றால் நீ படிச்சு என்ன பிரயோஷனம் ?

கேட்பேனா இல்லையா இப்போ. படிப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.?

குவாலிட்டி, கேரக்டர், தைரியம், வீரம், விவேகம், அரசியல் சாசன சட்ட பதவிக்கேற்ற செயல்படக் கூடிய நீதி வழுவா தன்மை. இவையெல்லாம் ஒருத்தனுக்கு இருக்கனும் என்று நினைத்தால் அவன் முது கெலும்புள்ள ஒரு மனிதனாக இருப்பான். முதுகெலும்பற்ற வெற்று பிண்டங்களை வைத்துக் கொண்டு அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் அவர்களிடம் என்ன பேசுவது?

இவ்வாறு பொன்ராஜ் அவர்கள் பேசினார்.



நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம், சோபனபுரத்தில் ரூபாய் 1.44 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள 4 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், கட்டி முடிக்கப்பட்ட 6 பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சேஷத்ரிமயும் தீபிசானு, சட்டமன்ற உறுப்பினர்கள் செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.கங்காதாரணி, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் திருவள்ளூர் மைதானத்தில் சிலம்பம் போட்டிகளை கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்.